www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

சென்னை

30.1.86

மன்னார் மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினரின் தமிழ் மக்கள் மீதான விமானத் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. 16 ராணுவத்தினர் பலி.

*******************************************************

நேற்று 29.1.86 காலை மன்னார்மாவட்டத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கவச வண்டிகளிலும் கனரக வாகனங்களிலும் வந்த ஏராளமான ராணுவத்தினர் தமிழ்ப் பொது மக்கள்மீது தாக்குதல் மேற்கொண்டனர். இவர்களுக்கு உதவியாக நான்கு கெலிக்கொப்டர்களும் நான்கு குண்டு வீச்சு விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டன. தகவல் அறிந்ததும் ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் ராணுவத்தினர்மீது அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது 16 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர்.

நேற்று முகாமிலிருந்து இருபத்தைந்திற்கும் மேற்பட்ட வாகனங்களில் புறப்பட்ட ராணுவத்தினர் மூன்று குழுக்களாகப் பிரிந்து மாந்தை என்ற இடத்தினூடாக ஒரு குழுவும் கட்டுக்கரை என்னுமிடத்தினூடாக ஒரு குழுவும் கண்டல் என்னுமிடத்தினூடாக இன்னொரு குழுவு மாகப் பிரிந்து பரப்புக் கடந்தான் என்னுமிடத்தினைச் சுற்றி வளைத்தனர். இச்சுற்றிவளைப்பின் போது கெலிக்கொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கிக் குண்டுமழை பொழிந்தன. குண்டு வீச்சு விமானங்கள் மிகஉயரத்திலிருந்து திடீரெனக் குத்தெனக் கீழேவந்து குண்டுகளை வீசிவிட்டு மீண்டும் உயரப் பறந்தன. கெலிக்கொப்ரர்களில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கிகள் தொடர்ந்து குண்டுகளைத்தீர்த்தவண்ணம் இருந்தன. தரையிலிருந்து ராணுவத்தினர் பீரங்கிகள் மூலம் 75க்கும் மேற்பட்ட குண்டுகளைத் தீர்த்தனர். பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்ட குண்டுகள் ஏழு மைல் தொலைவு தூரம் விழுந்து வெடித்தன. தகவல் அறிந்ததும் தலத்திற்கு விரைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத் தினர்மீது அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். கெலிக்கொப்ரர்கள், குண்டுவீச்சுவிமானங்கள் மீது ராக்கெற்றுகளை ஏவித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட நேரம் நடைபெற்ற பயங்கர யுத்தத்தில் 15 இராணுவத்தினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். எமது அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல கெலிக்கொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் பின்வாங்கி முகாமைநோக்கிச் சென்றன. இழப்புக்கள் அதிகமானதை அறிந்த ராணுவத்தினர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பின்வாங்கி முகாமிற்குள் ஓடி பதுங்கிக் கொண்டனர். பின்னர் 1 மணியளவில் மீண்டும் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொள்ள முற்பட்ட போதும் எமது போராளிகளின் ராக்கட் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் 4 மணியளவில் பின்வாங்கி முகாமிற்குள்சென்று விட்டன. இத்தாக்குதலின்போது பல வீடுகள், கடைகள் என்பன சேதமடைந்தன. பொதுமக்கள் அனைவரும் எதுவித ஆபத்துமின்றிக் காப்பாற்றப்பட்டனர். பொதுமக்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து மகிழ்ச்சியினுல் குதூகலித்து வெற்றியைக் கொண்டாடினர்.

எல். சுப்பிரமணியம்
அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(இவ் அறிக்கை லண்டனில் பிரித்தானியக்கிளையினரால் மறுவிநியோகம் செய்யப்படுகிறது.)

31.1.86

பி.கு: பிந்திய செய்திகளின்படி மேற்படி சம்பவத்தின்போது விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலினுல் கொல்லப்பட்ட சிங்கள ராணுவத்தின் தொகை 29 என அறிவிப் படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்